இலங்கை துறைமுக அதிகாரசபை

பதவி வெற்றிடங்கள்

இலங்கை துறைமுக அதிகாரசபையில் கீழ் குறிப்பிடப்படும் பதவியின் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதவி, சேவை வகை, வெற்றிட எண்ணிக்கைகள்	கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவம்	ஏனைய கட்டாய தேவைப்பாடுகள்	சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் சம்பளத்திட்டம்	குறிப்பு	வயதெல்லை
மொழி பெயர்ப்பாளர் (சிங்களம்/ ஆங்கிலம்) (Translator Sinhala – English) மேற் தரம் (SG) வெற்றிட எண்ணிக்கை - 01	க.பொ.த(உ.தரம்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று(03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் மற்றும் க.பொ.த(சா. தரம்) பரீட்சையில் சிங்கள மொழி அல்லது சிங்கள இலக்கியம் மற்றும் ஆங்கில மொழி அல்லது ஆங்கில இலக்கியத்திற்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல். மற்றும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்பட்ட மொழி பெயர்ப்பு (சிங்களம் - ஆங்கிலம்) தொடர்பான டிப்ளோமா அத்துடன் அரச அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் நிறுவன மொன்றில் மொழி பெயர்ப்பாள ரொருவராக (சிங்களம் - ஆங்கிலம்) ஐந்து(05) வருட அனுபவம்	I. சிங்களம் மற்றும் ஆங்கிலம் மொழி தொடர்பிலான சிறந்த அறிவு. II. சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் கணனி மூலம் கடிதம் தயாரிக்கும் ஆற்றல்.	6:3 (SG3) அடிப்படைச் சம்பள முனை ரூ. 53,425/= வருடாந்த சம்பள ஏற்றம்: ரூ. 1,150 /= (மொத்தச் சம்பளம் மாதாந்தம் ரூ.132,000 அளவினதாக இருக்கும்)	சகல விண்ணப்ப தாரிகளும் பதவிக்குரிய செயன்முறை மற்றும் நேர்முக பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.	வயது 18-45 இற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். அரச சேவையின் விண்ணப்ப தாரிகள் தொடர்பில் இவ் வயதெல்லை ஏற்புடையதல்ல. இப்பதவிக்கு விண்ணப்பிக்கும் முன்னாள் படைவீரர்களுக்கு அரச பொது நிருவாக அமைச்சின் இல 299 மற்றும் 1985.07.23 ஆம் திகதிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகும்.

ஏனையவை

சகல விண்ணப்பதாரிகளும்

1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. பதவி தொடர்பில் ஒப்படைக்கப்படும் பணிகளை சிறப்பாக நிறைவேற்றுதல் போலவே நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கு அவசியமான உடல், உள தகுதியினையுடையவராக இருத்தல் வேண்டும்.
3. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
4. நேர்முகக் குழுவின் தீர்மானத்தின் படி அல்லது பதவிக்கு அவசியமாயின் மருத்துவப் பரிசோதனையொன்றில் சித்தியடைதல் வேண்டும்.
5. இப் பதவி நிரந்தரப் பதவியொன்றாவதுடன் ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கு உரித்துடையதாகும்.
6. அரச அல்லது அரச கூட்டுத்தாபனங்களில் சேவையிலுள்ள அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தமது திணைக்கள/ கூட்டுத்தாபன தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். மேலே பதவிகளுக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படின் குறித்த திணைக்களம் / கூட்டுத்தாபனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க இணங்கும் குறிப்பொன்றும் இடப்பட்டிருத்தல் வேண்டும்.

பூரண சுயவிபரங்கள் உள்ளடங்கிய பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், ஏனைய உரிய கல்வி மற்றும் தொழிற் தகைமை சான்றிதழ்கள், சேவைச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் உறவினரல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர்கள் மற்றும் முகவரிகளுடன் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பதிவுத் தபாலில் 2026.11.16 ஆம் திகதிக்கு முன்னர் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தபாலில் காணாமல் போகும் அல்லது தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபை பொறுப்பேற்க மாட்டாது. குறித்த விண்ணப்பப்படிவத்தின் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் தினத்திற்கு பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பிரதான முகாமையாளர் (மனிதவளம் மற்றும் நிருவாகம்),
மனிதவளம் மற்றும் நிருவாகப் பகுதி,
இலங்கை துறைமுக அதிகாரசபை, கொச்சிக்கடை, கொழும்பு 13.